# இன்ஸ்பெக்டர் பத்திராஜவுக்கு தொடர்ந்து ரிமாண்ட்

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 9
போன் 389 National Tamil Daily இதழ் 358
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 11 ஷஃபான் 24 திங்கட்கிழமை [27-11-67]

## "கொலைக்குற்றத்துக்கு பிணை இல்லை" —மாஜிஸ்திரேட்

வல்வெட்டித்துறை, திங். வல்வை இளைஞன் கொலை வழக்கில் எதிரியான இன்ஸ்பெக்டர் எஸ். சி பத்திராஜவை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா, தொடர்ந்து ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஏப்ரல் மாதம் 8-ம் திகதி வல்வெட்டித்துறையில் ஆர். சிவஞானசுந்தரம் என்பவரை கொலை செய்ததாகவும், கொலை செய்ய உடந்தையாக இருந்ததாகவும், எஸ். சி. பத்திராஜ, மற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்றுக் காலை மீண்டும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அவசரக்காலச் சட்டப்படி இவ்வழக்கு தொடர முடியாதென்றும், அப்படியாயின் அட்டோர்னி ஜெனரலின் அனுமதியைப் பெற வேண்டுமென்றும், எதிரி சார்பில் ஆஜரான அட்வ

(8-ம் பக்கம் பார்க்க)

# ஐயாயிரம் தந்தி, டெலிபோன் ஊழியர் வேலைநிறுத்தம்

## இன்று நள்ளிரவு ஆரம்பிக்க முடிவு

கொழும்பு, ஞாயிறு

**ஐயாயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட அகில இலங்கை தந்தி, டெலிபோன் இன்ஸ்பெக்டர்கள், பொறியியலாளர் சங்கத்தினர் நாளை நள்ளிரவு முதல் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கின்றனர். இந்தச் சங்கத்தில் இன்ஸ்பெக்டர்கள், லயின்மன், பொறியியலாளர் அங்கம் வகிக்கின்றனர்.**

இந்த வேலைநிறுத்தத்தினால் நாடு முழுவதும் தந்தி, டெலிபோன் சேவை தடைபடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

யூனியன் பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் பிரதமர் சந்தித்துப்பேசினார். சில கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகப் பேச்சுவார்த்தையின் போது பிரதமர் ஒப்புக்கொண்டார். ஆயினும் முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் சம்மதிக்காததால் திட்டமிட்டபடி வேலைநிறுத்தம் செய்வதென யூனியன் பின்னர் தீர்மானித்தது.

14 கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்குகிறார்கள். சில கோரிக்கைகள் வருமாறு:-

O 1965-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் திகதியில் பதவி உயர்வு அளிக்கப்பட்ட சகல ஊழியர்களுக்கும் வருடாந்த சம்பள உயர்வு3 அளிக்கப்படவேண்டும். O தற்போது பத்து வருட சேவை செய்த ஊழியர்களுக்கு ரூபா 62-50 மாதாந்த சம்பளமும், பதவி உயர்வும் கொடுக்கப்பட வேண்டும். O தற்போதிருக்கும் 2-வது தரத்திலிருந்து முதலாம்தர பதவி உயர்வுக்கான பரீட்சையின்றி பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டும். O தொழிற் சங்க வேலைகளுக்காகப் பாவிக்கப்படும் தொலைபேசிக் கருவிக்கு பணம் அறவிடப்படாதிருக்கவேண்டும். O மேலதிக நேர அலவன்ஸ் ஒரு மணித்தியாலத்துக்கு கால் மணி நேரமாக இருப்பதை தபால் பகுதியினருக்கு கிடைப்பதைப் போன்று ஒரு மணித்தியாலத்துக்கு அரை மணி நேரமாக வழங்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில்

## உணவுவகை விலைஉயர்வு

### பாண் றாத்தல் 37 சதம்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று முதல் 1 இறாத்தல் பாணின் விலை 32 சதத்திலிருந்து 37 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அரை இறாத்தல் பாணின் விலை 16 சதத்திலிருந்து 19 சதமாகக் கூடியுள்ளது.

10 சதம் விற்ற கேக் 15 சதமாகவும், 10 சதம் விற்ற பணிஸ் 15 சதமாகவும் கூட்டப்பட்டுள்ளது.

இடியப்பம், தோசை, அப்பம், பிட்டு ஆகிய உணவு வகைகளின் விலையில் சில கடைக்காரர் ஒரு சதம் உயர்த்தியுள்ளனர். சில கடைகளில், இப் பலகாரங்களின் அளவைக் குறைத்து பழைய விலைக்கே விற்கின்றனர்.

மோதகம், சூசியம், கடலை வடை, வாய்ப்பன் ஆகியவற்றின் விலையை சில கடைக்காரர் 6 சதமாகக்கூட்டியுள்ளனர். 10 சதமாக இருந்த பெரிய உளுந்துவடை சில கடைகளில் 12 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது. சாப்பாட்டின் விலை ஒரு ரூபாவிலிருந்து 1 ரூபா 25 சதமாக உயர்ந்துள்ளது.

கரையூர்; பாஷையூர் மீனவர்

## குறைந்த விலையில் நிலம் பெறுவர்

யாழ்ப்பாணம், திங்கள் கரையூர், பாஷையூர் முதலிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் தத்தம் பகுதிகளில் மிகக்குறைந்த விலையில் நிலம்பெறவிருக்கின்றனர். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இப்பகுதிகளில் வீடமைக்கும் திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பிப்பதாகக் கூறி அதற்கான அத்திபாரக் கல் நாட்டப்பட்டும் இதுவரை அத்திட்டம் சம்பந்தமாக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாதது பற்றியும் குறித்த முடிக்குரிய நிலத்தை அவ்வப்பகுதி மீனவர் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள வகை செய்ய வேண்டுமென்றும் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் யாழ். மாவட்ட அரசாங்க அதிப

(8-ம் பக்கம் பார்க்க)

## "யாழ். துறைமுகதொழிலாளர் திறமைசாலிகள்; ஆனால்......"

### கருத்தரங்கில் அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், திங்கள் "துறைமுகக் கூட்டுஸ்தாபனப் புள்ளி விபரங்களின்படி யாழ்ப்பாணம் துறைமுகத் தொழிலாளர்களே திறமையாகவும் சுறுசுறுப்பாகவும் கடமையாற்றுபவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. இருந்த போதிலும் கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் குறைவான வேலையே செய்யப்பட்டுள்ளது" என நேற்று இங்கு நடைபெற்ற யாழ்ப்பாணம் கூட்டுறவு துறைமுக சேவையாளர் சமாஜ கருத்தரங்கில் பேசுகையில் வடபகுதி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கடந்தவருடம் 27,000 ரூபா பெறுமதியான வேலைகள் இங்கு செய்யப்பட்டதாகவும் இவ்வருடத்தில் 17000 ரூபா பெறுமதியான வேலையே செய்யப்பட்டுள்ளதாகவும மேலும் இங்கு வந்தகப்பல்களுக்குதாமதத் தீர்வைஅதிகம் கட்டப்பட்டுள்ளதென்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

சமாஜத்தலைவர் திரு. சிக்மரிங்கம்கங்கப்பகுதி உதவிக் கலெக்டர் திரு. விமலதர்ம கூட்டுறவு ஆக்க ஆணையாளர். திரு. பி. ஏ. சில்வா ஆகியோரும் பேசினர். [ந.நி]

'தென் கிழக்கு ஆசியாவில்

# இலங்கையே அதிக உதவியை மே. ஜேர்மனியிடம் பெற்றுள்ளது'

## பத்திரிகை மாநாட்டில் டாக்டர் கெயிஸிங்கர்

கொழும்பு, திங்கள் கண்டியிலிருந்து கொழும்புக்குத் திரும்பிய மேற்கு ஜேர்மன் அதிபர் டாக்டர் கேற் கெயிஸிங்கர் இங்கு அளித்த பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில், பணிவுடன் செய்யக்கூடியதை எல்லாம் மேற்கு ஜேர்மனி செய்யும் என்று கூறினார். அவர் நேற்றுக்காலை, விமானத்தில் பாகிஸ்தானுக்குப் பயணமானார்.

தாம் மேற்கொண்டுள்ள விஜயத்தின்நோக்கம் [illegible] ளாதார உதவியல்லவென்று [illegible] குறிப்பிட்ட டாக்டர் கெயிஸிங்கர், கண்டியிலிருந்து திரும்புகையில், ரயிலில் இலங்கைப் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில், சில உதவித்திட்டங்கள் பற்றி ஆலோசனை நடத்தியதாகக் கூறினார்.

இதுவரை மேற்கு ஜேர்மனி 15 கோடி ஜேர்மன் மார்க்வரை, இலங்கைக்கு உதவி யளித்துள்ளதாகவும், [illegible] தொகை தான் அதிகக்கூடிய

[8-ம் பக்கம் பார்க்க]

## "நாட்டின் எதிர்காலம் இளம் விவசாயிகள் கையில்"

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு "நாட்டின் பெருகிவரும் சனத்தொகையையும் அதே நேரத்தில், அதே வேகத்தில் பெருகிவரும் உணவுப் பற்றுக்குறையையும் நோக்குமிடத்து எதிர்காலச் சுபீட்சம் இன்றைய விவசாயிகளின் பெருமுயற்சியில்தான் தங்கியுள்ளதென்பது தெளிவாகத் தெரிகிறது. இந்நிலையில் இளைஞர் தியபழக்கங்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

தெல்லிப்பளை சுகாதார நிலையத்திலிருந்து காலை 6 மணிக்கு பால் எடுத்துக் கொண்டு பால் விநியோகிக்கும் நிலையங்களுக்கு விநியோகிப்பதற்கு சொந்த சயிக்கிள் வைத்திருப்பவர்கள் தேவை. விபரங்களுக்கு வலி. வடக்கு கூட்டுறவுப் பால் சங்கம், உடுவில் என்ற விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். 2150

## தேவை

**ஆள்:**

எங்கள் வியாபார ஸ்தாபனத்துக்கு, வியாபார அனுபவமும், கணக்கு வேலையில் திறமையுள்ள ஆள் தேவை. ஆங்கிலம் சிங்களம் பேசத் தெரிந்திருக்கவேண்டும். நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு: எம். பொன்னுத்துரை அன் பிரதர்ஸ். நொச்சியாகம. 2152

## தேவை

**ஆசிரியர்:**

ஜி. ஏ. கியூ. மாணவருக்கு தத்துவம் படிப்பிக்க ஒருவர் உடனடியாகத் தேவை. விளம்பரஇல. 2151.மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2151


# "திருமலையில் தமிழ் பல்கலைக்கழகம் வேண்டும்"

## மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்க தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு

தமிழ் மொழியில் கல்வி பயிற்றும் ஒரு தன்னிறைவுள்ள பல்கலைக் கழகத்தை திருகோணமலையில் நிறுவித் தரும்படி அரசாங்கத்தைக் கோரும தீர்மானம் மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்க 2-வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது,

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

○ எம் இனத்திற் புகுந்துள்ள சாதிக் கொடுமை இன்று ஈழத்தில் சிவநெறிக்கும் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் உலை வைக்கக்கூடிய அச்சம் தரும் திருப்பத்தை அளித்திருப்பதைக்கண்டு ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்றவாய்மொழியினை அடித்தளமாக வைத்துஇயங்கும் எமது தொழிற்சங்கம் இந்தக் கொடுமையைக் கிள்ளிஎறியக் கடுமையான சட்டம் உடனடியாக இயற்றவேண்டும் என்று அரசாங்கத்தைக் கோருகிறது,

○ 1958-ம் ஆண்டின் 28-ம் இலக்கத் தமிழ்மொழி சட்டத்தின்கீழ் அமைக்கப் பட்ட விதிகளை ஏற்ற முறையில் செயற்படுத்தவும்- அதனடிப்படையில் திறைசேரி வெளியிட்டுள்ள 686-ம் இலக்கச் சுற்றறிக்கையை இலங்கை மத்திய வங்கியில் செயற்படுத்தவும் நிறைந்த தமிழ், ஆங்கிலம், பொருளாதாரப் புலமைவாய்ந்த ஓர் உயர்பதவியாளரை நியமித்து அவர் ஆணைக்குட் பட்ட தமிழுக்கான தனிப் பிரிவை நிறுவும்படி மத்தியவங்கி ஆட்சி பீடத்தைக் கேட்டுக்கொள்கிறது,

## தொழிலாளர்சங்க தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்தலஸ்தாபன, நகரசபை தொழிலாளர் சங்க வடமாகாணக் கிளையின் கூட்டம் திரு. ஆ. குலசையின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

போயாமற்றும் விடுமுறை நாட்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இருமடங்கு சம்பளம் கொடுக்க வேண்டும். 1964ம் ஆண்டு முதல் அடிப்படைச் சம்பளம் ரூபா 2-50 அரசாங்கம் கூட்டியுள்ளது. இதுவரை அவை தரப்படாததால் உடன் தரல் வேண்டும். தற்காலிககூலித்தொழிலாளர்களுக்கு ரூ. 3.70சதம் வழங்கப்படுகிறது. இது வாழ்க்கைச் செலவிற்குபோதுமானதாக இல்லாமையால் ரூபா 5 ஆகக் கூட்டி நாட்கூலியாக கொடுக்க வேண்டும். தொழிலாளர்கள் வீட்டுத்திட்டம் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும்.

## பணம் பொருள் இல்லை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள 'லக்சல' விற்பனை நிலையத்தில் பனம்பொருள் உற்பத்திப் பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தினமும் இங்கு செல்லும் பொதுமக்கள் பலரும் ஏமாற்றத்துடன் செல்லவேண்டியுள்ளதாம்.

பனம் பொருள் உற்பத்திப் பொருட்களுக்கு வடபகுதியே பெயர்பெற்ற போதிலும் இங்கு விற்பனை செய்ய போதிய பனம் பொருள் உற்பத்திப் பொருட்களை உற்பத்தியாளர்கள் தராமலிருப்பதாலேயே இதற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக 'லக்சல' பிரதம ஊழியர் ஒருவர் தெரிவித்தார். இதனால் இலங்கையின் மற்றைய பகுதிகளிலுள்ள 'லக்சல' விற்பனை நிலையங்களிலும் பனம் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இவர் தெரிவித்தார்.

இக்குறையை நீக்க பனம் பொருள்களை உடன் விற்பனைக்குத் தந்துதவுமாறு உற்பத்தியாளர்களை குடிசைக் கைத்தொழில் இலாகா வேண்டியுள்ளது. (ந. நி.)

## சாவகச்சேரி நகரசபைத் தேர்தல்

### டிசம்பர் 8-ல் நியமனம் தாக்கல்

யாழ்ப்பாணம், திங்.

சாவகச்சேரி நகரசபைத் தேர்தலுக்கானநியமனப்பத்திரங்கள் டிசம்பர் மாதம் 8-ந்தேதி தாக்கல் செய்யப் படவிருக்கிறது.

கட்சிசார்பில் ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் அபேட்சகர்களை நிறுத்தவேண்டுமென, தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் விரும்புகின்றனராம். சாவகச்சேரி எம்.பி. திரு. வி, என். நவரத்தினம் நாடு திரும்பியபின் இது பற்றி இறுதிமுடிவு செய்யப் படுமெனத் தெரிய வருகிறது.

கட்சிசார்பில் அபேட்சகர்களை நிறுத்துவதா அல்லது கட்சி ஆதரவாளர்கள் சுயேச்சையாகப் போட்டியிடுவதா என்பதுபற்றித்தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சாவகச்சேரிக் கிளையும் அடுத்த வாரம் கூடி ஆராயவிருக்கிறது.

இத்தேர்தலில், முன்னாள் தலைவர்கள் நால்வரும், நான்கு வழக்கறிஞர்களும் போட்டியிடுவார்களெனத் தெரியவருகிறது. தற்போதைய அங்கத்தவர்களில் சிலர் போட்டியிலிருந்து விலகிக்கொள்வரெனக் கூறப்படுகிறது.





# டிஸ்பிரின்

கரையக்கூடிய டிஸ்பிரின், வலி, காய்ச்சல், தடிமல், டெங்குச் சுரம், பல் வலி, தசை நார் வலிகள் நோவுகளிலிருந்து வன்மையான துரிதநிவாரணம் தருவதென்று பெரிதும் ஏற்கப்படுவது.

• டிஸ்பிரினின் கூட்டுப் பொருள்கள், டெங்குச் சுரம், காய்ச்சற் குணம் ஆகியவற்றால் உடம்பின் சந்துகளில் ஏற்படும் நோவுகளை அகற்ற உதவுகின்றன.

டிஸ்பிரின் கரையக்கூடியது; அது கரையக்கூடியதாகையால் இரத் தோட்டத்தில் விரைவாகச் செறிகிறது; விரைவாகச் செறிவதால், டிஸ்பிரின் துரிதமான வன்மையான நிவாரணம் தருகிறது.

டிஸ்பிரின் முற்றிலும் கரைவதாகையால். வன்மையும் பாதுகாப்பும் ஒருங்கே வாய்ந்தது. அது, வேறு விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கரையாத துகள்கள் எவையும் உங்கள் வயிற்றில் தங்க விடுவதில்லை.

விரிவாகப் பாவித்தும் பரீட்சித்தும் ஒப்பிட்டும் பார்த்த பின், உலகெங்குமுள்ள டாக்டர்களால் பரந்தளவில் தேர்ந்தெடுக்கப்படுவதால், டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம்.

டிஸ்பிரின் அலுமினிய உறையில் சுற்றிச் சீலிடப்பட்டிருப்பதால் நன்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

கரையக்கூடிய டிஸ்பிரின் – வன்மையான பாதுகாப்பான துரித நிவாரணத்துக்கென விசேஷமாக உருவாக்கப்பட்டது.

டிஸ்பிரினைக் கரைத்துப் பருகுங்கள்; அல்லது மாத்திரையாக விழுங்குங்கள்

றெக்கிட் அன்ட் கொலமன் தயாரிப்பு.

"சூரியன் மார்க்"

## வாசனை சந்தன வில்லைகள்

## வாசனை சந்தனப் பவுடர்

கோவில் தேவைகளுக்கும்
திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது

கிடைக்குமிடம்:

## சுந்தரம் பிரதர்ஸ்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி-கிரேக்க போர் அபாயம் குறைந்து வருகிறது

அதென்ஸ், நவம்பர் 26

**துருக்கிக்கும் கிரீசுக்குமிடையே உடனடியாகப் போர் மூளும் அபாயம் இப்போது குறைந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.**

**இதற்குக் காரணம், இரு நாடுகளுக்குமிடையே ராஜதந்திரத் தொடர்புகள் பரிமாறப்பட்டு வருவதேயாகும்.**

அத்துடன் இரு நாடுகளுக்குமிடையே சமரசம் ஏற்படுவதற்கான முயற்சிகள், அமெரிக்க ஜனாதிபதியான திரு. ஜோன்சனின் விசேஷ பிரதிநிதி, யூதாண்டின் விசேஷ பிரதிநிதி, வட அத்லாந்திக் நாடுகள் பாதுகாப்பு ஒப்பந்த நாடுகள் ஸ்தாபனத்தின் பிரதிநிதி ஆகியவர்களால்மேற்கொள்ளப்பட்டு வருவதும், போர் அபாயத்தைக் குறைத்துள்ளது.

வட அத்லாந்திக் நாடுகள் பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனப் பிரதிநிதி, அங்காராவிலும், அதென்ஸிலும் துருக்கிய, கிரேக்கபிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியபின், சைப்பிரஸ் பிரச்னையைத் தீர்ப்பதற்கான கிரேக்க திட்டமொன்றைத் துருக்கியிடம்சமர்ப்பித்தார் அத்திட்டத்தின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. இப்போது, துருக்கிமந்திரிசபை அத்திட்டத்தைப் பரிசீலனை செய்துவருகிறது.

### துருக்கி நிபந்தனை

சைப்பிரஸிலிருந்து கிரேக்க துருப்புகள் வெளியேற வேண்டுமென்பது துருக்கியின் நிபந்தனையாகும். சைப்பிரஸிலிருந்து துருப்புகளை வெளியேற்ற கிரீஸ் ஒப்புக்கொள்ளத் தயாராகவிருந்தாலும், விரிவான ஒரு சமரச உடன்பாட்டுக்கு அது வழி வகுக்குமென்றுலன்றி, துருக்கியின் இராணுவப்பலத்துக்குப் பணிந்தல்ல அவ்விதம் ஒப்புக்கொள்வது என கிரீஸ் வலியுறுத்திவருகிறது.

### துருப்புகள் உஷார் நிலை

இது இப்படியிருக்க, கிரேக்க—துருக்கி எல்லையில், இரு நாட்டுத் துருப்புகளும், எந்த நேரமும் போரில் குதிப்பதற்கு உஷார்நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

சைப்பிரஸில் நேற்றுச் சில வெடிகுண்டுச் சம்பவங்கள் நடைபெற்றன. அத்துடன் சைப்பிரஸ் மீது துருக்கி விமானங்கள் பறந்து செல்வதும் தொடருகிறது.

---

ஜப்பான்

## மந்திரிசபை மாற்றப்படும்

டோக்கியோ நவ. 26

ஜப்பானிய மந்திரிசபை மாற்றியமைக்கப்பட விருக்கிறது. நேற்று நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் மந்திரிகள் எல்லோரும் தமது ராஜினுமாக் கடிதங்களைப் பிரதமர் ஸாட்டோவிடம் சமர்ப்பித்துக்கொண்டனர். மந்திரி சபையை மாற்றி அமைப்பதற்காகவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக திரு. ஸாட்டோ தெரிவித்தார்.

---

## யூகோ - மே. ஜெர்மன் ராஜீய உறவு

பொன், நவ. 26

யூகோஸ்லாவியாவுடன் மீண்டும் ராஜதந்திரத் தொடர்புகள் நிறுவுவதற்கு மேற்கு ம்ஜர்மனி விரைவில் முயற்சி எடுக்குமெனக் கூறப்படுகிறது.

இத்தொடர்புகள். 1957-ம் ஆண்டில் முறிக்கப்பட்டன. கிழக்கு ஜெர்மனியை யூகோஸ்லாவியா அங்கீகரித்ததைத் தொடர்ந்து. மேற்கு ஜெர்மனிபெல்கிரேடுடனுன தனது ராஜதந்திர தொடர்புகளைமுறித்துக் கொண்டது.

---

## லோஹியாகிராமம்

போபால், நவ. 26

மத்திய பிரதேசத்தில் சதார்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த துங்காஸா கிராமத்தில் 'லோஹியா கிராமம்' உருவாகி வருகிறது. இக்கிராமம் காலஞ்சென்ற சோஷலிஸத் தலைவர் டாக்டர் ராம் மனோஹர் லோஹியாவின் நாமத்தைக்கொண்டுள்ளது.

ஐம்பது நிலமற்ற குடும்பங்கள் வாழும் இக்கிராமம் அப்பகுதியிலுள்ள சமூக ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விரிவான வீடமைப்புத் திட்டத்துடன் நகர வாழ்க்கைக்கு அவசியமான பல வசதிகளையும், 750 ஏக்கர் நிலப்பரப்பில் இவர்கள் உருவாக்கி வருகின்றனர்.

இக்கிராமத்தில் லோஹியா ஞாபகார்த்த நூல்நிலையமொன்றும் அமைக்கப்படும்.

---

## 600க்குமதிகமான கம்யூனிஸ்டுகள் ராமநாதபுரத்தில் கைது

சென்னை, நவ. 26

ராமநாதபுர மாவட்டத்தில் மேற்கு வங்காள ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை கவர்னர்கலைத்ததை ஆட்சேபித்து நடந்த ஆர்ப்பாட்டங்களில் 600க்கும் அதிகமான கம்யூனிஸ்டுகள் கைதுசெய்யப்பட்டனர்பின்னர் பிணை உறுதியில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

---

# பினங்கு கலவரங்களில் 11 பேர் மாண்டனர்

## கம்யூனிஸ்டுகள் மீது மலேஷிய பிரதமர் குற்றச்சாட்டு

கோலாலம்பூர், நவ.26

மலேஷியாவில், பழைய டொலரை நாணயமதிப்புக் குறைப்புச் செய்ததை யொட்டிப் பினங்தீவில் நடைபெற்ற கலவரங்களில் இதுவரை 11 பேர் உயிரிழந்ததாகவும் இன்னும் பலர் காயத்துக்குள்ளானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலவரங்கள் சம்பந்தமாகப் பினங்கிலுள்ள 27 இடதுசாரிகள் கைது செய்யப்பட்டனர். அங்குள்ள இடதுசாரிக்கட்சிக் காரியாலயத்தையும் பொலிசார் முற்றுகையிட்டனர்.

பினங்கில் கலவரங்களைத் தூண்டிவிட்டவர்கள் கம்யூனிஸ்டுகளே என்றும், அங்கு சட்டமும் ஒழுங்கும் விரைவில் நிலைநாட்டப்படுமென்றும் மலேஷியப் பிரதமர் துங்குஅப்துல் ரஹ்மான்கூறியுள்ளார்.

கோலாலம்பூரில், நேற்று நாணய மதிப்புக்குறைப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### பஞ்சாப்புக்கு புதிய முதல் மந்திரி

அமிர்தசரஸ், நவ. 26

பஞ்சாப் ராஜ்யத்தின் புதிய முதல் மந்திரியாக திரு. லக்ஷ்மண் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். பஞ்சாப் கவர்னரே அவரை இப்பதவிக்கு நியமித்துள்ளார்.

தமது முடிவில் கவர்னர் அவசரம்காட்டிவிட்டார் என்று பழைய முதல் மந்திரி திரு. குர்ணம் சிங் புகார் செய்துள்ளார்.

---

ஆந்திராவில்

## அமெரிக்க தொண்டருக்கு அனுமதி இல்லை

ஹைதரபாத், நவ. 26

ஆந்திரப் பிரதேசத்தில் அமெரிக்க சமாதானப் படைத் தொண்டர்கள் எவரையும் புதிதாக அனுமதிப்பதில்லை என அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

தற்போது ஆந்திராவில் பணியாற்றும் தொண்டர்கள், தமது பணிகளை முடிக்கும்வரை அனுமதிக்கப்படுவர். ஆனால் அதன் பின்னர் புதிதாக எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

---

## ஏடனிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸ்

ஏடன், நவ. 26

ஏடனிலிருந்து பிரிட்டன், தனது துருப்புகளை வாபஸ் பெறும் வேலை இப்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. தென்அரபிய சமஷ்டி ராணுவம், அதிகாரங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

நான்கு வருடங்களுக்கு முன் தென்அரபிய சமஷ்டியில் பிரிட்டன் பிரகடனப் படுத்திய அவசரகால நிலைச் சட்டம் நேற்று நீக்கப்பட்டது.

---

தென் அமெரிக்க நகரில்

## நஞ்சு கலந்த பாண் சாப்பிட்டு 70 பேர் மரணம்

பொகோட்டா, நவ. 26

தென் அமெரிக்காவில் பொகோட்டா என்னுமிடத்தில் நஞ்சு கலந்த பாணைச் சாப்பிட்டதன் விளைவாகக் குழந்தைகள் உட்பட 70 பேர் இறந்தனர். மற்றும் நூற்றுக்குமதிகமானோர் மோசமான நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பாண் செய்யப்பட்ட இடத்தில், தவறுதலாக நஞ்சு கலக்கப்பட்டிருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

பொகோட்டோப் பட்டினம், ராணுவ கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

---

## பூட்டான் அரசர் இந்தியா வருகிறார்

புதுடில்லி, நவ. 26

பூட்டான் அரசர் அடுத்த வருட முற்பகுதியில் இந்தியாவுக்கு ஒரு வார உத்தியோகபூர்மான விஜயம்மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# கல்கத்தாவில் நிலைமை சீரடைந்து வருகிறது

கல்கத்தா, நவ. 26

கல்கத்தா, நேற்று ஒருசில சம்பவங்களைத் தவிர்த்து, அமைதியாக இருந்தது. இரு இடங்களில், ஊரடங்குச் சட்டம், அமுலிலிருந்துவந்த நிலைமை மேம்பட்டு, தளர்த்தப்பட்டது. ஆனால், மற்ற நான்கு இடங்களில் அது தொடர்ந்து அமுலில் இருக்கும்.

நேற்று வன்முறைச் சம்பவமொன்று, பட்டாசுகள் (7-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எப்பொழுதும் அகமகிழ்ச்சியும், முகமலர்ச்சியும் உடையவனாக இரு. நிகழவேண்டுவன தம் இயல்பால் நிகழும். உனக்கும் உலகுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது. உன்னோடு தொடர்பு அற்றவைகளுடன் வீணாகத் தொடர்புகளை ஏற்படுத்தாமல், உன்னோடு தொடர்புடைய இறைவனோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க ஸு கார்த்திகைமீ 11வ. (27-11-67)

# வேலைநிறுத்தத் தீர்மானம்

தந்தி, தொலைபேசித் துறை இன்ஸ்பெக்டர், என்ஜினியர்கள் இன்று நள்ளிரவு தொடக்கம் வேலைநிறுத்தத்திலிறங்குவதெனத் தீர்மானித்திருக்கின்றனர். இதே சமயம் இலங்கை ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வைச் சமாளிக்க உடனடியாகச் சம்பள உயர்வு வழங்கப்படவேண்டுமென தனியார் துறை ஊழியர்கள் குரல் எழுப்புகின்றனர்; இதற்காக அவர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கவும் திட்டமிட்டு வருகின்றனர். ரூபாய் மதிப்புக் குறைப்பை எதிர்த்து எதிர்க்கட்சியினரும் தீவிர பிரசாரம் நடத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

தந்தி, தொலைபேசி இன்ஸ்பெக்டர், என்ஜினியர்கள் யூனியன் முன்னரே தங்கள் குறைகளைத் தெரிவித்து கோரிக்கை விடுத்திருந்தது. கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடில் வேலைநிறுத்தம் செய்வதெனவும் தீர்மானித்திருந்தனர். இவர்களின் குறைகளைப் பிரதமரே நேரில் ஆராய்ந்து நாட்டின் இன்றைய நிலையை எடுத்துக்கூறி கோரிக்கைகள் சிலவற்றை ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். வேறு சில கோரிக்கைகளை நிறைவேற்றித்தர ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆயினும் இன்று நள்ளிரவு முதல் வேலைநிறுத்தம் செய்வதென அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

வேலைநிறுத்தம் சுலபமான விஷயமல்ல. அரசாங்கத்துக்கும், பொது மக்களுக்கும், நாட்டுக்கும் ஏற்படக்கூடிய கஷ்டநஷ்டங்கள் அதிகம். இதைவிட வேலைநிறுத்தம் செய்யும் ஊழியருக்கும் கஷ்டநஷ்டங்கள் பல. எனினும் வேலைநிறுத்தம் செய்வதெனத் தீர்மானித்தால் அவர்களுக்கு நியாயமான குறைகள் இருக்கின்றன என்பதுதான் அதன் அர்த்தம்.

வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ள தந்தி, தொலைபேசி இன்ஸ்பெக்டர், என்ஜினியர்கள் சென்ற வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர் பலருக்கு இடைக்கால ஏற்பாடாக அவர்கள் பலரின் 'அலவன்ஸ்' சிறிது அதிகரிக்கப்பட்டது. இப்பொழுது இலங்கை ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்ட உடனும் அரசாங்க ஊழியரின் 'அலவன்ஸ்' மேலும் சிறிது உயர்த்தப்பட்டது. இதுவும் ஓர் இடைக்கால ஏற்பாடுதான்.

வாழ்க்கைச் செலவுக் கஷ்டமும் விலைவாசி உயர்வும் அரசாங்க ஊழியருக்கு மட்டும்தானா? தனியார் துறையைச் சேர்ந்தவர்களுக்கு கஷ்டம் இல்லையா என்ற கேள்வி எழுகிறது. தனியார்துறையிலும் சில தொழிற் சங்கங்களும் முதலாளிமார் சம்மேளனமும் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ள இடங்களில் உள்ள ஊழியர்களுக்கும் சிறிதளவு நன்மை கிடைக்கிறது. இந்த ஒப்பந்தத்துக்குட்படாத தனியார்துறை ஊழியர் நிலை என்ன என்பது பற்றி அந்த ஊழியர்கள் மத்தியில் கவலை எழுந்துள்ளது. இது இயல்பு. இவை தவிர படித்துவிட்டு, வேலையே கிடைக்காமல், குறைந்த சம்பளத்திலாவது வேலை கிடைத்தால் போதுமே என்ற நிலையில் வீதிகளில் திரியும் படித்த வாலிபர் பலர், 'சம்பளம் வாங்கிக்கொண்டே அதுபோதாது என்று கேட்கிறார்களா நமக்கு வேலையே கிடைக்கக் காணோம்' என்று மனம் புழுங்குவதும் பலரும் அறிந்த விஷயம்.

இத்தனையையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி எப்படி அரசியல் லாபம் சம்பாதிக்கலாமென்ற முயற்சியில் அரசியல் வாதிகளும் அரசியல் கட்சிகளும் சிந்தனை செய்கின்றனர்.

நாட்டுமக்களுக்கு இன்று பெரும் கஷ்டமும் தொல்லையும் ஏற்பட்டுள்ளது. நாட்டுக்கு இது மிகப் பெரிய சோதனைகாலம். இலங்கையின் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும்கூட ஆபத்து நேரலாம். இச்சமயத்தில் வேலைநிறுத்தங்களைத் தொடங்குவதும் அரசியல் இலாபத்துக்காக அவற்றைப் பயன்படுத்த முனைவதும் யாருக்கும் நிச்சயம் நன்மை தராது.

## மலையகக் கலைஞருக்கு

### பாராட்டு

வெள்ளவத்தை, ஞாயிறு

''இலங்கையில் தமிழ் நாடகம் வளர்ச்சியடையவில்லை என்ற குறையை குண்டலகேசி என்ற இக் காப்பிய நாடகம் போக்கிவிட்டது. குண்டலகேசி வசன கர்த்தா காலஞ்சென்ற வி. என். பெரியசாமி அவர்கள் மலையகம் தந்த சிறந்த கலைஞர். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசியை வெற்றி நாடகமாகத் தயாரித்துள்ள இவரை நான் பாராட்டுகிறேன்.''

இவ்வாறு சுகாதார அமைச்சின நிரந்தரக் காரியதரிசி திரு. கு பாலசிங்கம் கொழும்பு லயனல்வென்ட் தியேட்டரில் நடைபெற்ற குண்டலகேசி என்னும் காப்பிய நாடகத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

# நினைத்தபடி நடந்துவிட்டால்...

கொழும்பு செட்டியார் தெரு முத்துவிநாயகர் கோவிலில் வெள்ளியன்று காலை 10-30 மணிக்கு வாரியார் சுவாமிகள் காரைக்காலம்மையார் சரித்திரம் சொல்வதாக ஏற்பாடு. கால் மணி தாமதமாகிவிட்டது அவர் வர. காலை 8-30 முதல் ராமகிருஷ்ண மிஷன் போயா வகுப்பு குழந்தைகளுக்கு 'அன்பு' என்பதைப் பற்றிப் பேசிவிட்டு வந்ததில் தான் இந்தத் தாமதம்.

''தாமதமாக வந்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும். அப்படி உங்களைக் கேட்டதற்காகவும் மன்னிக்க வேண்டும் ஏனென்றால் என் மீது நீங்கள் கோபப்படுவீர்கள், நீங்கள் கோபக்காரர்கள் என்று நினைத்துத்தானே மன்னிப்புக் கேட்டேன். அப்படி உங்களை நினைப்பது தப்பல்லவா? நீங்கள் எதற்கும் கோபப்படுவீர்களா? எது நடந்தாலும் இறைவன் செயலென்றும் அதுவும் நல்லதுக்குத்தான் என்றும் உங்களுக்குத்தான் தெரியுமே.

''ஒரு சக்கரவர்த்தி இருந்தார். அவர் தமது திருமகனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நாள் வைத்தார். ஆனால் அவர் நினைத்தபடி நடக்கவில்லை. 14 வருஷம் திருமகனார் வனவாசம் சென்று திரும்பியபின்தான் பட்டாபிஷேகம் நடந்தது. ஒரு சக்கரவர்த்தி நினைத்த குறிப்பிட்டகாலத்தில் நடக்கவில்லை என்றால், நாம் எப்பாத்திரம்?

'சக்கரவர்த்தி நினைத்தது போல் அன்றே பட்டாபிஷேகம் நடந்திருந்தால், அதற்குச் சிறப்பு இருந்திருக்குமா? அந்தசக்கரவர்த்தி, யார் என்பது எனக்கு மறந்துவிட்டது'' என்று புன்சிரிப்புடனே வாரியார் அவர்கள் சொன்னபோது, பல குழந்தைகளும் 'தசரதர்' என்று ஏககாலத்துக் கூறினர்.

அவரும் சிரித்த முகத்துடனே ''ராம பட்டாபிஷேகத்தின் சிறப்புக்குக் காரணர் அனுமன் தான். தசரதன் நினைத்தபோதே பட்டாபிஷேகம் நடந்திருப்பின், அனுமன் எப்படி அதில் கலந்துகொண்டிருக்க

## ஐயாறன் எழுதுவது

முடியும்? முடியாதுதானே. ஆகவே அப்படித் தாமதமாக நடந்ததும் எவ்வளவு நல்லதாயிற்று.'' என்று வாரியார் சுவாமிகள், தாம் கால்மணி நேரம் தாமதமாக வந்த ஒரு சின்ன விஷயத்தையே வைத்து, இராமாயணக் கதையைக்கூறி, 'எல்லாம் நன்மைக்கே' என்ற நம்பிக்கையும் உறுதிப்பாடும் நமக்கு ஏற்படுமாறு அழகாக நகைச்சுவையுடன் சிறு குழந்தைகளுக்கும் புரியும் வண்ணம் புகட்டினார்கள்.

ஃ ஃ ஃ

''எல்லாருக்கும் ஏதாவது ஒரு குறை இருக்கும். சிவபெருமானுக்கும் ஒரு குறையுண்டு. அவருக்குப் பெற்றோர்கள் இல்லாதது ஒரு குறை. காரைக்காலம்மையார் பேய் உருவம் தாங்கி, தலையால் கைலாயத்துக்கு நடந்து வருகையில், அவரைக்கண்ட பார்வதி ''இது யார்?'' என்று கேட்டாராம். ''இது எம் அம்மை'' என்று சிவபெருமான் கூறி ''அம்மையே'' என்று அழைக்க, ''அப்பா'' என்று காரைக்காலம்மையார் கூறி, நான்கு வரங்கள் கேட்டார். இன்ப அன்பு, பிறவாமை, மறவாமை, தாம் மகிழ்ந்துபாடி இறைவன் ஆடும்போது அவர் திருவடிக்கீழ் இருக்கும் பெருநிலை. இதைவிடச் சிறந்த வரம் வேறிருக்கமுடியாது. காரைக்காலம்மையார் 1700 ஆண்டுகளுக்கு முன்னிருந்தவர். திருஞானசம்பந்தருக்கு 400 ஆண்டுகள் முற்பட்டவர். முதல்முதலாகப் பதிகம் பாடியவரும் அவரே.

''ஒரு பெண் பிறந்துவிட்டால் அன்றே பெற்றோர்களுக்கு ஒரு கவலை. நல்ல மாப்பிள்ளை கிடைக்கவேண்டும் என்பதுதான். புனிதவதிக்கு விவாகமாகி, பரமதத்தனுடன் இரு வருடங்கள் குடும்பம் நடத்தினார். உள்ளமெல்லாம் சிவபெருமானிடம் அதிமதுர மாங்கனியைச் சிவனருளால் பெற்று அது மறைந்ததும் பரமதத்தன் பிரிந்து மதுரை சென்று வேறு விவாகம் செய்து, பிறந்த குழந்தைக்குப் புனிதவதி என்று பெயரிட்டு, தன் முதல் மனைவியைத் தெய்வமாக வணங்கினான். பின்னர் மதுரை வந்த புனிதவதியை, பரமதத்தன் காலில் விழுந்து வணங்க[...] புனிதவதி உலக வாழ்வை[...] துறந்து பேயுருவம்கொண்[...] கைலாயம் சென்ற கதை[...]யைப் பலரும் ரசிக்கு[ம்] முறையில் சுமார் இர[ண்]டரைமணி நேரம் பொ[...]ந்துதள்ளினர். கதையை விட, அறிவுரைகளும், [...] கதைகளும் வாழ்க்கைக்[கு] மிகவும் பயன்படக்கூடி[ய] பல அனுபவ யோசனைகள் நிறைந்து, கேட்போரை கவர்ந்து, மெய்மறக்[கச்] செய்கின்றது - அருள்மொ[ழி] அரசின் புனித வாக்கு. அ[வ]ரது கதாப்பிரசங்கம் ம[க்க]ளுக்கு மேலான உபதேச[]மாகும்.

ஃ ஃ ஃ

மாங்கனி வேண்டுமென[...] புனிதவதி, சிவபெருமா[னிடம்] உருக்கமாகக் கேட்டு[ப்] பெற்றதைப் பற்றிக் கூ[று]கையில், சுவாமிகளே பு[னித]வதியாக மாறி, உள்ள[ம்] குழைந்து கண்ணீர் மல்[க] கேட்போர் மனதை[] உருக எவைத்துவிட்டா[ர்]. பேச்சும், பாட்டும் மட்[டு]மின்றி, நடிப்பும் சேர்ந்[து] அவரது பிரசங்கம் மு[...] தமிழ்க் கலைவிருந்துமாகி[...]றது. இதை ஒரு தொழி[லா]க்கொள்ளாமல், கதா[ப்] பிரசங்கத்தை மக்களுக்கு[ம்] தெய்வத்துக்குமான ஒ[...] புனித கைங்கரியமாக[ச்] செய்கின்றார், அவர்.

வெள்ளியன்று இ[...] இடங்[களி]ல் பேச்[சு] கா[லை]யில் [ரா]மகிருஷ்[ண] மிஷ[ன்] பின்னர் செட்டியார் தெ[ரு] முத்துவிநாயகர் கோயி[லில்] மாலையில் ஜிந்துப்பிட்டி சு[...] டுப்பிரார்த்தனையில் 'மு[ரு]கன் பெருமை' குறித்[து] அஞ்சலில் பேச்சு, அத[ன்] பின் விவேகானந்தசபை மண்டபத்தில் நாவல[ர்] குறித்துப் பேச்சு. கடை[சி]யாக, ஜிந்துப்பிட்டி கோ[யி]லில் பாரதம் பற்றி சும[ார்] 3 மணி இன்னிசையுட[ன்] கதாப்பிரசங்கம்.

முதல் நாளன்று காலையி[ல்] சிவாலயத்திலே நூல்நி[லை]யத்தைத் திறந்துவைத்[து] சத்யபாமையைப் பற்றி[ப்] பேச்சு. பின்னர் வானொ[லி]யில் 5 கதைகளை தொட[ர்ந்]தாற்போல டேப்ரிகார்[ட்] செய்த[து]. எழுதி படிக்[க]வில்லை. ஒரு துண்டு குறி[ப்]புக்கூடக் கிடையாது. [சுந்]தரர், திருநாவுக்கரச[ர்], சிறுத்தொண்டர், திருநீ[ல]கண்டர், கண்ணப்பர் இ[வர்] ஐந்து கதைகளையும் நவரச[ங்]களும் ததும்பச்செய்தா[ர்]. இதுவரை வேறு யாரு[ம்] கொழும்பு வானொலியி[ல்] இப்படி ஒரு குறிப்புமின்றி பல மணிநேரம் தொடர்[ந்து] பல கதைகளையும் ஒலி[ப்] பதிவுசெய்தது கிடை[யா]தாம். இது ஒரு புதி[ய] 'ரிகார்ட்'. வேறு எந்[த] வானொலியிலும்கூட இ[ப்]படி உண்டா என்பது ச[ந்]தேகம். பக்கவாத்தியங்க[ள்] கூட இடையில் மாறின. ஆனால் வாரியார் சுவா[மி]கள் இருந்த நிலை விட்[டு] அகலாமல், வெகு நேர[ம்] தாகத்துக்கும் சாப்பிட[ா]மல் கதை செய்ததை[ப்] பார்க்கப் பிரமிப்பா[க] இருந்தது. ஏதோ ஒ[ரு] தெய்வசக்தி தான் அவரு[க்]குள் இருந்து இப்படி இய[க்]குகிறதென்பதில் சந்தே[க]மில்லை.

ஃ ஃ ஃ

இறவாத இன்ப அன்[பு]
வேண்டிப் பின் வேண்[டு]
கின்று[ம்]
பிறவாமை வேண்டு[ம்]
மீண்டும் பிறப்புண்டே[ல்]
உன்னை என்று[ம்]
மறவாமை வேண்டும் இ[ன்]
னும் வேண்டும் நா[ன்]
மகிழ்ந்து பா[டி]
அறவா நீ ஆடும்போ[து]
உன் அடியின் கீழ் இருக்[க]
வென்று[ம்]

—காரைக்காலம்மையா[ர்]

## இன்றைய பலன்

27-11-67

திங்கட்கிழமை

கார்த்திகை மாதம்

11-ந் திகதி

நட்சத்திரம் - உத்தரம் காலை 8-29 மேல் அத்தம்.

திதி - தசமி பகல்9-34மேல் ஏகாதசி

சுபநேரம் - 12-67—1-37

ராகுகாலம் - 9-37 — 9-07.

மேஷம்- இதயக்குமுறல் இனவழி நாட்டம்

ரிஷபம்- தெளிந்த மனபபோக்கு தெய்வ பலம்

மிதுனம்- பரந்த நோக்கு பதவியில் ஏற்றம்

கடகம்- வார்த்தை அமிர்தம் வரவும் நன்று

சிங்கம்- நில்லாது பொருள் செல்லாது போகும்

கன்னி- குடும்பப் புயல் குமைச்சல் அதிகம்

துலாம்- மகிழ்ச்சி வெள்ளம் உறவாடும் உள்ளம்

விருச்சிகம்- பொருட் பிணக்கு பொருத வரும் பகை

தனுசு- கலையுலகத் தொடர்பு கற்பனை மிகுதி

மகரம்- உயர்ந்த நோக்கு உதவியும் கிடைக்கும்

கும்பம்- துன்பத்தின் நிழல் தொடர்ந்து வரும் இன்று

மீனம்- முக்கனிச் சுவைபோல் மோகன வாழ்வு

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## யாழ்ப்பாணத்து சுவாமி சமாதிக்கு

### விசேஷ பூஜை

யாழ்ப்பாணம், திங்

பருத்தித்துறை வியாபாரி மூலையிலுள்ள பாரதியாரின் ஞானகுரு எனக் கூறப்படும் அருளம்பல சுவாமிகள் என்ற யாழ்ப்பாணத்துச் சுவாமிகளின் சமாதிக்கு இன்று விசேஷ பூஜையும், அபிஷேகமும் நடக்கவிருக்கிறது.

# மாவட்டரீதியாக நூல்நிலைய அமைப்பு

## நூல்நிலைய ஆலோசகர் கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

யுனெஸ்கோ நூல்நிலைய ஆலோசகரான செல்வி லுயாலின் ஐ. ஏ இவான்ஸ் இலங்கையிலுள்ள பொது நூலகங்களையும் பாடசாலை நூலகங்களையும்பாகுபடுத்தி ஆராயும் பொருட்டு நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ஆசியாவில் நூலக சேவைகளை தேசிய அடிப்படையில் திட்டமிட்டமைப்பது சம்பந்தமாக அடுத்த மாதமுற்பகுதியில் கொழும்பில்நடைபெறவிருக்கும் சர்வதேச மகாநாட்டில் இலங்கைக்கான மாதிரித் திட்டத்தை ஆராய்வதற்கு முன்னோடியாக இவர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். இவருடன் கொழும்பு நூல் நிலையத்தைச் சேர்ந்த திருமதி கொரியாவும் வந்திருந்தார்.

நேற்று யாழ்ப்பாணம், சங்கானை, நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள பொது நூல் நிலையங்களை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகருடன் இவர் சென்று பார்வையிட்டார்.

சங்கானை பட்டின சபை நூல் நிலையத்துக்கு இவர் விஜயம் செய்தபோது இங்கு 6000 மக்களுக்கு இது ஒரு நூல் நிலையமாக விருப்பதாகவும், இதில் 1500 க்கும் மேற்பட்ட நூல்கள் உண்டென்றும், வலி மேற்கில் இந்நூல் நிலையமே திறம்பட இயங்குவதாகவும் திரு. மாணிக்கவாசகர் செல்வி இவான்ஸிடம் தெரிவித்தார்.

நூல் நிலையங்களை பாகுபடுத்துவது சம்பந்தமாக இங்கு ஆராயப்பட்டபோது இலங்கையிலுள்ள சகல நூல் நிலையங்களையும் ஒரு ஸ்தாபனத்தின் கட்டுக்காப்புக்குள் நடாத்தினால் அரசியல் பிரச்னைகளால் சில நூல்நிலையங்கள் பாகுபாடு காட்டப்பட்டு சீர் குலைந்துவிடுமென்றும், இதனால் கல்வி, அறிவு வளர்ச்சி பாதிக்கப் படலாமென்றும் சங்கானை பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் அச்சம் தெரிவித்தார்.

செல்வி இவான் இதற்குப்பதிலளிக்கையில் நூல் நிலையங்களை மாவட்ட ரீதியாக அமைத்து அவை மூலம் நூல்களை விநியோகம் செய்யலாமென்று அபிப்பிராயம் தெரிவித்தார். இதுபற்றிய முடிவுகள் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் மகா நாட்டிலேயே தீர்மானிக்கப்படும் [ந. நி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லில் விழுந்து வணங்கவே ...ிதவதி உலக வாழ்வைத் ...ந்து பேயுருவம்கொண்டு ...லாயம் சென்ற கதை ...ப் பலரும் ரசிக்கும் ...றையில் சுமார் இரண் ...ரைமணி நேரம் பொழி ...தள்ளினார். கதையை ...—, அறிவுரைகளும், உப ...தைகளும் வாழ்க்கைக்கு ...வும் பயன்படக்கூடிய ... அனுபவ யோசனைகளும் ...றைந்து, கேட்போரைக் ...ர்ந்து, மெய்மறக்கச் ...ய்கின்றது - அருள்மொழி ...ரசின் புனித வாக்கு. அவ ...து கதாப்பிரசங்கம் மக்க ...க்கு மேலான உபதேசமு ...கும்.

ஃ ஃ ஃ

...மாங்கனி வேண்டுமென்ற ...ிதவதி, சிவபெருமானை ...ருக்கமாகக் கேட்டுப் ...பற்றதைப் பற்றிக் கூறு ...யில், சுவாமிகளே புனித ...தியாக மாறி, உள்ளங் ...ழைந்து கண்ணீர் மல்கி, ...ட்போர் மனதையும் ...ருக வைத்துவிட்டார். ...ச்சும், பாட்டும் மட்டு ...ன்றி, நடிப்பும் சேர்ந்து, ...வரது பிரசங்கம் முத் ...மிழ்க் கலைவிருந்துமாகின் ...து. இதை ஒரு தொழிலா ...க்கொள்ளாமல், கதாப் ...ரசங்கத்தை மக்களுக்கும் ...தய்வத்துக்குமான ஒரு ...னித கைங்கரியமாகச் ...செய்கின்றார், அவர்.

...வெள்ளியன்று ஐந்து ...டங்...ில் பேச்... காலை ...ில் ...ாமகிருஷ்...மிஷன், ...ின்னர் செட்டியார் தெரு ...த்துவிநாயகர் கோயில், ...ாலையில் ஜிந்துப்பிட்டி கூட் ...ப்பிரார்த்தனையில் 'முரு ...ன் பெருமை' குறித்து ...ஞ்சலில் பேச்சு, அதன் ...ின் விவேகானந்தசபை ...ண்டபத்தில் நாவலர் ...றித்துப் பேச்சு. கடைசி ...க, ஜிந்துப்பிட்டி கோயி ...ல் பாரதம் பற்றி சுமார் ... மணி இன்னிசையுடன் ...தாப்பிரசங்கம்.

...முதல் நாளன்று காலையில் ...வாலயத்திலே நூல்நிலை ...த்தைத் திறந்துவைத்து ...த்யபாமையைப் பற்றிப் ...பேச்சு. பின்னர் வானொலி ...ில் 5 கதைகளை தொடர்ந் ...ாற்போல டேப்ரிகார்ட் ...செய்த... எழுதி... படிக்க ...ில்லை. ஒரு து...் குறிப் ...புக்கூடக் கிடையாது. சுந் ...ரர், திருநாவுக்கரசர், ...ிறுத்தொண்டர், திருநீல ...ண்டர், கண்ணப்பர் இந்த ...ந்து கதைகளையும் நவரசங் ...களும் ததும்பச்செய்தார் ...இதுவரை வேறு யாரும் ...காழும்பு வானொலியிலே ...இப்படி ஒரு குறிப்புமின்றிப் ...பல மணிநேரம் தொடர்ந்து ...பல கதைகளையும் ஒலிப் ...பதிவுசெய்தது கிடையா ...தாம். இது ஒரு புதிய ...ரிகார்ட்'. வேறு எந்த ...வானொலியிலும்கூட இப் ...படி உண்டா என்பது சந் ...தேகம். பக்கவாத்தியங்கள் ...கூட இடையில் மாறின. ...ஆனால் வாரியார் சுவாமி ...கள் இருந்த நிலை விட்டு ...அகலாமல், வெகு நேரம் ...தாகத்துக்கும் சாப்பிடா ...மல் கதை செய்ததைப் ...பார்க்கப் பிரமிப்பாக ...இருந்தது. ஏதோ ஒரு ...தெய்வசக்தி தான் அவருக் ...குள் இருந்து இப்படி இயக் ...குகிறதென்பதில் சந்தேக ...மில்லை.

ஃ ஃ ஃ

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டு
கின்றார்
பிறவாமை வேண்டும்
மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்
னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது
உன் அடியின் கீழ் இருக்க
வென்றார்.

—காரைக்காலம்மையார்.

## ஆசிரியருக்கு கடிதங்கள்

# ஆதிரை விழா

ஒரு மாதத்தில் ஒரு திதியோ ஒரு நக்ஷத்திரமோ இருமுறை வந்தால் பிந்தியதைக் கொள்ளவேண்டுமென்பது பொதுவிதி. பிந்தியதற்குக் குற்றமுளதாயின் முந்தியதைக் கொள்ள வேண்டுமென்பது சிறப்பு விதி.

இவ்வாண்டு மார்கழி மாதத்தில் திருவாதிரை இருமுறை வருகின்றது. பிந்தியதற்கு மகர மாதப்பிறப்போடு கூடிய குற்றமுண்டாயதால் முந்தியதையே கைக்கொண்டு எங்கள் நாட்டுப் பஞ்சாங்கக்காரர்கள் ஆதிரை அபிஷேக தரிசனங்களைக் குறித்திருக்கின்றார்கள். அதனை ஏற்றுக்கொள்ளாமலும் மார்க்கசிரிஷ மாதத்தில் பூரணையை அடுத்து வந்த திருவாதிரையைக் கைவிட்டும் புஷ்ய மாதத்தில் தைப்பூரணையோடு வந்த திருவாதிரையைக் கைக்கொண்டும் நடேசர் அபிஷேக தரிசனங்களைக் கொள்வது முன்னர் ஒருபோதும் நடவாத ஒரு புரட்சியாகும்.

கார்த்திகை மாதம் பூரணை சர்வாலய தீபம், திருக்கார்த்திகை விரதம், விநாயக விரதாரம்பம், விநாயக ஷட்டி விரதம், அதனையடுத்து ஆதிரைவிழா [திருவெம்பாவைப் பூசை] ஆரம்பம். அது தொடக்கம் ஒன்பதாம் நாளிரவு அபிஷேகம், பத்தாம் நாளுதயம், தரிசனம் என்னும் இவைகள் கார்த்திகைப் பூரணை தொடங்கி மார்கழி பூரணையை அடுத்து ஒரு மாதத்துள் நடப்பனவாகும். இதுவே பண்டுதொட்டு வந்த வழக்கமுமாகும். இதனைவிட்டு, ஆதிரைவிழாவைப் புஷ்ய மாதத்துக்கும் தைப்பூரணைக்கும் ஏறக்குறைய ஒரு மாதம்வரை பின்னுக்கு இழுத்துச்செல்லும் புரட்சி என் வாழ்நாளில் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கிடையில் ஒருபோதும் நடந்ததில்லையெனத் திடமாகச் சொல்லுவேன்.

சி. சு. தேசிகர்

காரைநகர்.

ஃ ஃ ஃ

## சபைகள் கருத்து என்ன?

மார்கழி திருவாதிரையை எப்போது அனுஷ்டிப்பதென்பது இப்போது ஒரு கேள்வியாக எழுந்துள்ளது. ஆகையால், சைவ அனுட்டான சபை, வேதாகமசபை, குருமார் சபை, கோயில்அதிகாரிகள் சபைதிருவாதிரையை எப்போது அனுஷ்டிக்கலாம் என்பதனைத்தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிரமஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள்,
கந்தசாமிகோவில் ஆதீனத்தாகர், மாவிட்டபுரம்.

## நாவலர் நினைவு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

சாந்தையர் மடம் சைவ அபிவிருத்திக் கழகத்தின் சார்பில் நாவலர் நினைவு விழா நடைபெற்றது. விசேஷபூசைவழிபாட்டுடன பஜனை நடைபெற்றது.

சைவப்புலவர் திரு.வ.கந்தசாமி நாவலரின் நற்றொண்டு'' என்னும் பொருள் பற்றி பேசும்போது ''அக்கால சூழ்நிலையில் நாவலரின் நற்றொண்டு தக்க பயனளித்தது. சைவத்தையும், தமிழையும் தமது இரு கண்களாகப் போற்றிவந்தார். நாவலர் பெருமானின் அரிய நூல்களைக்கற்பவர் தொகை அருகிவிட்டது. சைவ வினாவிடை பாலபாடங்கள் பாடசாலைகளிற் கற்பிக்கும் அளவு குறைந்து விட்டது அவற்றை நாம் பொன்னுகப் போற்றிப் படிக்கவேண்டும். அவை என்றும் அழிவில்லாதன சமயக் கல்விக்குமுக்கிய இடம் தருகின்றன.'' என்றார்.

# பாடசாலை சீரமைப்பு: ஆசிரியசங்கம் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

'பாடசாலைகளின் புதிய சீரமைப்பினை நடாத்துவதற்குக் கைக்கொண்டுள்ள வழிவகைகளையும், 1968-ம் ஆண்டிலிருந்துஅதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதனையும் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு வன்மையாக எதிர்த்திருக்கின்றது.'

வடமாகாண ஆசிரியர் சங்கம் கல்வி மந்திரிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'குறிப்பிட்ட செயற்திட்டம் போதியளவு பிரபலப்படுத்தப்படவில்லை, ஆசிரிய சேவையிலுள்ளவர்களதும், பொதுமக்களதும் கருத்துக்கள் கோரப்படவில்லை. சீரமைப்புத்திட்டம் செயல்முறைக்கு வரமுன்னர் பொது விவாதத்திற்குவிட்டு அங்கீகாரம் பெறுவதோடு அதனைச் செயற்படுத்தும் ஆசிரியர்களோடும் கலந்தாலோசிக்க வேண்டுமெனவும் திட்டவட்டமாக வேண்டிக் கொள்கின்றோம்.

அன்றியும், அடிப்படையானவையும், படிப்படியானவையுமான கல்வி சம்பந்தமான மாற்றங்கள் சட்டங்களாலன்றி மேற்கூறிய வகையில் நிர்வாகச் சுற்றுநிருபங்களால் நடைமுறைக்கு கொண்டு வரப்படுகின்றன

இறுதியாக, குறிப்பிட்ட மாற்றங்களால் ஏழாம்வகுப்புச் சித்தியெய்தும் மாணவர்களின் மேற்படிப்புக்கான வாய்ப்புக்கள் வரையறை செய்யப்பட்டு விடும் என்ற அச்சத்தினையும் வெளியிடத் தகுந்த காரணங்கள் உண்டு என்பதை அறியத் தருகின்றோம்.''

இம்மகஜரின் பிரதிகள் மகாவித்தியாதிபதி,வட பிரதேச வித்தியாதிபதி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது,

## சமசமாஜ தொண்டர் படை

உடுப்பிட்டி, ஞாயிறு

அகில இலங்கை சமசமாஜ வாலிபர் சங்க சம்மேளனம் நாடு பூராவிலுமுள்ள சகல மாவட்டக் கிளைச் செயலாளர்கட்கும் வாலிபர் சங்க செயலாளர்கட்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையொன்றில் சமசமாஜ வாலிபர்தொண்டர் படையொன்றை அமைக்குமாறும், ஒவ்வொரு தொண்டர் படையிலும் குறைந்தது முப்பது வாலிபர்களாவது சேர்ந்திருக்க வேண்டுமென்றும், தொண்டர் படையினர்வெள்ளை காற்சட்டையும்இளம் சிவப்புநிறமேற்சட்டையும், சிவப்புத்தொப்பியும்அணிய வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "பழையன பாதுகாக்க வேண்டும்''

உடுவில், ஞாயிறு

''இளைஞர் திடகாத்திரமாய் வாழவும் நாட்டில் பஞ்சம் பிணி போன்றவை ஒழியவும் நாடு முன்னேறவும் பழையவை பாதுகாக்கப்பட வேண்டும்''

இலங்கை நாணய மதிப்புச் சம்பந்தமாகவும் நமது பொருளியல் நிலைபற்றியும் எடுத்துக் கூறிய திரு. எம். நல்லையா மேற்கண்டவாறு கூறினார். உடுவில் இளைஞர் கழகத்தில் அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார். கழகத் தலைவர் திரு. வி. பரிபூரணந்தசர்மா கூட்டத்துக்கு தலைமை வகித்தார்

## 26 சேலைகள் கிளிப்புகள் பொலிசார் கைப்பற்றினர்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி. எல். விஜயதிலகா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று வல்வெட்டித்துறை நெடியகாடு வீதியால் சென்றுகொண்டிருந்த ஒருவரை சந்தேகத்தின்பேரில் தடுத்து நிறுத்தி அவர் கொண்டுசென்ற பார்சலை அவிழ்த்துப்பார்த்தபோது அதனுள் பெறுமதிவாய்ந்த 26 சேலைகளும் 4,800 தலைக்கிளிப்புகளும் இருக்கக் கண்டுபிடித்தனர்.

இப்பொருட்கள் யாவும் கடத்தல் பொருட்கள் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இப்பொருட்கள் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகிறது. இது சம்பந்தமாக ஒருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

## ரூ.30,00 சேலைகள் வல்வையில் பொலிஸ்வேட்டை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. விஜயதிலகா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி வல்வெட்டித்துறை பிரதான வீதியால் சென்றுகொண்டிருந்த ஒருவரைச் சோதனையிட்டபோது ரூபா 3,000 பெறுமதியான 9 சேலைகளையும், இரண்டரை ருத்தல் அம்பர் சாணத்தையும் கண்டுபிடித்தனர். பொருளைப் பறிமுதல்செய்ததுடன் அந்த நபரையும் கைதுசெய்தனர். இப்பொருட்கள் யாவும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டவையெனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இப்பொருட்கள் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகிறது

## மாணவர்மன்ற தேநீர் விருந்து

புலோலி, ஞாயிறு

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி உயர் வகுப்பு மாணவர் மன்றம், தமது வருடாந்த தேநீர் விருந்து வைபவத்தை நடத்தியது.

கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போதைய சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபருமான திரு. க. பூரணம் பிள்ளையும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். மாணவர் மன்றத் தலைவரான ஆர். கிருபைராசா கூட்டத்தற்குத் தலைமைவகித்தார். கல்லூரி உப அதிபர் ஆர். எம். குணரத்தினம் உட்படப் பலர் பேசினர்.

## "நாயன்மார்கள் போல்

# சைவத்தை வளர்க்க நாவலர் இலங்கையில் தோன்றினார்''

### வாரியார் புகழ்மாலை

கொழும்பு, ஞாயிறு

''தமிழ் நாட்டிலே சைவத்தை வளர்க்கநாயன் மார்கள் நால்வர் தோன்றினர். அவர்களைப் போல, இலங்கையில் சைவத்தை வளர்க்க ஆறுமுக நாவலர் தோன்றினார். என்று திருமுருக கிருபானந்தவாரியார் கூறினார். நேற்று முன்தினம் மாலை கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற நாவலர்தின விழாவில் கலந்து கொண்ட திருமுருக கிருபானந்தவாரியார் மேலும் கூறியதாவது:

''நாவலருக்கு நிகர் நாவலரே. அவர் கை வைத்த நூல்களில் வேறு எவரும் கைவைக்கவில்லை. வேதம், சாஸ்திரம், இராகம், திருமுறை, ஆகிய சகல விடயங்களையும் தன்னகத்தே கொண்ட நூல்களை நாவலர் இயற்றியும், புதிதாகப்பதிப்பித்தும் அருந்தொண்டாற்றினார்.''

திருமுருககிருபானந்த வாரியார்மேலும் பேசுகையில், நாவலரின் நூல்களில் இலட்சக் கணக்காணபிரதிகள்அச்சிட்டு வெளியிடும்படி, சைவ உலகுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

# விற்பனை பொருட்களை வீடுகளில் வைத்திருப்பது குற்றம்

### பொலிஸார் அறிவிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

',கடைகளில் விற்பதற்கு வழங்கப்படும் பொருட்களை வீடுகளிலும், வேறு இடங்களிலும் வைத்திருப்பது சட்டப்படி குற்றமாகக் கணிக்கப்படும்.''

இவ்வாறுவர்த்தகர்களுக்கு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

விலைக் கட்டுப் பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப் பட்டுவரும் பொருட்களை அனேகவர்த்தக ஸ்தாபனச் சொந்தக்காரர்கள் கடைகளில் வைக்க இடமில்லையெனக் காரணம்காட்டி, தமது வீடுகளில் வைத்திருப்பது 'பதுக்கல்' என்ற குற்றத்தின் கீழ் கணிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வீடுகளில் விற்பனைப் பொருட்களைவைத்திருப்பவர்களைக்கண்டு பிடிக்குமாறு சகல பொலிஸாருக்கும் வடபகுதி பொலிஸ்சுப்பிரிண்டன் உத்தரவிட்டுள்ளார். (ந.நி)

## பால்மா விநியோகமில்லை

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவுப் பட்டணசபையினரால் முல்லைத்தீவு சுகாதார வைத்தியர் மூலம் விநியோகம் செய்யப்பட்டுவந்த குழந்தைகளுக்கான பால்மா சென்றகிழமையுடன் நிறுத்தப்பட்டுள்ளது. இதுபற்றிப் பட்டண சபைத் தலைவர் திரு. அ. சந்தியாப்பிள்ளையிடம் கேட்டபோது தாங்கள் எத்தனை முறை தந்திகள் அடித்தும் பால்மாவை இலங்கைப் பால்சபையினர் வழங்கவில்லையெனக் கூறினார்.

## கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை

காலி, ஞாயிறு

மாப்பலகமவைச் சேர்ந்த லியனகே பஸ்தியான் என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த குணதாஸ, அந்தரயாஸ், ரத்னபாலா, சிறிசேன, பியசேன ஆகிய ஐவரும் 1966 ம் வருடம், ஆகஸ்ட் மாதம் 29ந் திகதியன்று சுட்டுக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப் பட்ட வழக்கில், காலி அசைஸ் நீதவான் விக்டர் தென்னக்கூன் எதிரிகளை விடுதலை செய்தார்.

உடுப்பிட்டி, ஞாயிறு

கெருடாவில் என்னுமிடத்தில் ரூபா5000செலவில் மீன்சந்தையொன்றைநிறுவ உடுப்பிட்டிக்கிராம சபை முடிவு செய்துள்ளது. விரைவில் இப்புதிய சந்தைக்கான வேலைகள் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## நூல்நிலைய நிர்வாகம்

யாழ்ப்பாணம், திங்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த 'யுனெஸ்கோ' நூல் நிலையஆலோசகரானசெல்வி எவாலின் ஐ. ஏ. எவான்ஸ் இன்று இங்குள்ள பாடசாலைகளிலுள்ள நூல் நிலையங்களுக்கு விஜயஞ்செய்யவிருக்கின்றார்.

இன்றுமாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் பொதுஜன நூல்நிலையமேல்மாடியிலிருக்கும் அமெரிக்க கலாசாரப் பகுதி மண்டபத்தில் இவர் ''நூல்நிலையநிர்வாகம்', என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார். [ந.நி,]

# நல்லை ஆதீன ஆண்டு விழாவில் இன்று பட்டமளிப்பு

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன ஆண்டு விழா இன்று மாலை நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெறுகிறது

பஜனை, சொற்பொழிவுகளுடன் பாராட்டு வைபவமும் இடம்பெறும்.

''சிவதர்மசீலர்'' திரு. கனகசபை அவர்கள் விழா அறநெறியாளரும், கலைஞர்களும், சைவசீலர்களும் கௌரவிக்கப்பட உள்ளனர். சிறுப்பர் ஐயா எனப் பொதுமக்களால் அன்புடன் அழைக்கப்படும் திரு. கனகசபைஅவர்களதுவள்ளல்தன்மையைப் பாராட்டுமுகமாக இவ்வாண்டுவிழாவில் அன்னாருக்குச்'' சிவதர்மசீலர்'' என்ற பட்டம் வழங்கி ஆதீனம் கௌரவிக்கின்றது. தவில் வித்துவான் தட்சணாமூர்த்தி பிரஹமஸ்ரீ



குகசர்மா, திரு. பொன் அப்புக்குட்டி பண்டிதை செல்விதங்கம்மா அப்பாக்குட்டிஅவர்களுக்கும் ஆதீனம் கௌரவமளிக்கவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டு

உடுவில், ஞாயிறு

"யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தி இம்முறை அதிகமான பயனை அளித்து வருகிறது என்பது யாவரும் அறிந்தது. இதற்குக் காரணம் விவசாயிகள் காட்டிவரும் தீவிர அக்கறைதான். இதற்கான விதைகிழங்கை நமக்கு அரசாங்கம் வழங்கி வருகிறது. இதைப்போல ஏனைய விதை தானியங்களையும் அரசாங்கம் வழங்க முன்வரவேண்டும். யாழ்ப்பாண விவசாயிகள் சுறுசுறுப்பு மிக்கவர்கள். அரசாங்கம் போதியவசதியளித்தால் இலங்கைக்குப் போதுமான உபஉணவுப் பொருட்களை நாம் உற்பத்திசெய்யப் பின்நிற்கமாட்டோம்."

இவ்வாறு நேற்று நடைபெற்ற இணுவில் விவசாயிகள் கழக கூட்டத்தில் உரை நிகழ்த்திய திரு. வி. விநாயகமூர்த்தி கூறினார். திரு. எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## சமாதான நீதவான்களுக்கு பாராட்டுவிழா

அளவெட்டி, ஞாயிறு

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் திரு. செ. ரங்கநாதன் கியூ. ஸி. தலைமையில் திரு. செ. மயில்வாகனம், திரு. அ. தனபாலசிங்கம் ஆகியோர் சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி ஓர் உபசாரவிழா நடைபெற்றது. ஆசிரியர் திரு. தா. பொன்னம்பலம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. எஸ். இளையதம்பி, ஆசிரியர் அருளப்பு, கிராமசேவையாளர் திரு. செ. சச்சிதானந்தம், பண்டிதர் திரு. க. நாகலிங்கம், ஆசிரியர் வி. பொன்னம்பலம் ஆசிரியர் அ. விஸ்வநாதன், திரு. சு. சிவசுப்பிரமணியம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## குடைபிடித்து பிரயாணம் செய்தனர்

சுழிபுரம், ஞாயிறு

காரைநகரில் இருந்து சுழிபுரம் சித்தங்கேணி, வட்டுக்கோட்டை தபாற்கந்தோர்களில் தபால் எடுத்துச்செல்லும் இ. போ. ச. பஸ்ஸில் நேற்று முன்தினம் மாலை பிரயாணம் செய்தவர்கள் குடைபிடித்துப் பிரயாணம் செய்தனர். பஸ்ஸுக்குள் எந்த ஆசனத்திலும் இருக்க முடியாத நிலையில், மழைநீர் ஒழுகிக்கொண்டிருந்ததாலேயே இந்நிலை ஏற்பட்டது.

## "சங்கத்தில் பதிவு செய்ய வேண்டும்"

அளவெட்டி, ஞாயிறு

"அரசாங்கத்தின் நன்கொடையுடன் நிறுவப்பட்டிருக்கும் நெசவு நிலையங்களில் சில சங்கங்களில் பதிவு செய்யப்படாமல் பொறுப்பு அதிகாரியின் மேற்பார்வையிலிருக்கின்றன. இந்த நெசவு நிலையங்களைச் சங்கத்தில் பதிவு செய்யப் படவேண்டு"மென்று வலிவடக்கு காரியாதிகாரி திரு. பற்றிக் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

## பொலிஸார் நிதி வழங்கினர்

யாழ்ப்பாணம், திங்.

வல்வைத் துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக பொலிஸாருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கில் பொலிஸ் தரப்புச் செலவுக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நிதி சேர்க்கப்பட்டு வருகின்றது. சகல பொலிஸாரும் இவ்வழக்குச் செலவுக்காக நிதி வழங்கியுள்ளனர். (ந. நி

## "சைவமதத்தின் அடிப்படையில் தமிழ் வளர்க்கப்பட வேண்டும் நாவலரின் இந்தக் கனவு நனவாகவேண்டும்"

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

'சமயம் தமிழனை ஈன்றெடுக்கிறது. மொழி அவனை வளர்க்கிறது. இவ்விரண்டையும் தமது விழிகளாகப் போற்றி வளர்த்த பெருமை யாழ்ப்பாணத் தமிழ்ப் பரம்பரையைச் சேர்ந்தவரும், ஐந்தாம் குரவருமான நல்லூர் ஆறுமுகநாவலருக்குரியது.'

இவ்வாறு மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் பண்டிதர் எஸ். கந்தையா உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நாவலர் குருபூசையில் குறிப்பிட்டார். பண்டிதர் இ. நவரத்தினக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. கந்தையா தொடர்ந்து பேசியதாவது:

'நாவலர் கனவுகளில ஒன்று, சைவமதத்தின் அடிப்படையில் தமிழ வளர்க்கப் படவேண்டும் என்பதே. எனவே, ஈழத்துச் சைவமக்களுக்கென ஓர் இந்துப் பல்கலைக்கழகம் கட்டிஎழுப்பப் படவேண்டும். கோவையும் நாயன்மார்களுடையபாடல்களும் தமிழ் இலக்கியங்களின பெரும பகுதியும், நாட்டுமக்களின் சிந்தனையோட்டங்களுடனும் பழக்க வழக்கங்களுடனும் பின்னிப் பிணைந்துள்ள இன்றையநிலையில், சைவமறியாதவன் தமிழன் அல்லன் என்றே கூற வேண்டும். ஆகையால்தான் இந்துசமய அடிப்படையிலேய தமிழும் பிற கலைகளும் உருவாகவேண்டுமென்ற கிளர்ச்சி தோன்றியுள்ளது.'

திரு. துரை-மனோகரன் நன்றிகூறினார்.

## டிசம்பர் 7-ல் நியமன பத்திரம் தாக்கல்

உடுவில், ஞாயிறு

சுன்னாகம் பட்டினசபையின் புதிய தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் டிசம்பர் 7-ந் திகதி தாக்கல் செய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடைபெறும் திகதி இன்னும் குறிக்கப்படவில்லை அனேகமாக ஜனவரி நடுப்பகுதியில் தேர்தல் நடைபெறலாம் என்றும். பெப்ரவரி முதல் வாரத்தில் புதிய சபையின் தலைவர் தெரிவு நடைபெறலாம் என்றும் தெரியவருகிறது.

அண்மையில் நடைபெற்ற வட்டார நிர்ணய ஆய்வுக் குழுவின் சிபார்சுப்படியே வட்டாரங்கள் பிரிக்கப்பட்டு தேர்தல் நடைபெறும் என்றும் அறியவருகிறது.





செறிந்த சுவை, சிறந்த கலவை,
நிறைந்த புகை பிடி இன்பம்...
இவை தரும்
திருப்தியின் சின்னமே
திரீரோஸஸ்
இலங்கையின் அபிமான சிகரெட்

இலங்கையில் தயாரிப்போர்
சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிடெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

# றோயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA

உதைபந்தாட்டம்

# இரு போட்டிகளிலும் ருவின்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், திங்கள் நல்லூர் ருவின்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இளவாலை சென்ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற இரு பிரிவு உதைபந்தாட்டப் போட்டியிலும் ருவின்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

முதலாவதாக நடைபெற்ற 'பி' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில ருவின்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 5 கோல்களால் வெற்றியீட்டினர். ருவின்ஸ் கழக கப்டன் முருகேந்திரன் செல்வரத்தினம், கிருஷ்ண குமார், தேவதவஞானம் ஆகியோரின் விளையாட்டு ரசிக்கக் கூடியதாகவிருந்தது. சென் ஜேம்ஸ் கழகத்தினர் ஒரு கோலும் போடாததால் ருவின்ஸ் கழகத்தினர் சுலபமாக இப் போட்டியில் வெற்றியீட்டினர்.

அடுத்து நடைபெற்ற 'ஏ' பிரிவுப் போட்டியில் இருசாராரும் கடுமையாக மோதிக் கொண்டனர். ஆட்டம் தொடங்கி 5 நிமிடத்தில் சென்ஜேம்ஸ் கோஷ்டியினர் தமது முதலாவது கோலைப் போட்டனர். அடுத்து ருவின்ஸ் கழகத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியமும் ஒரு கோலைப் போட்டு இரு கோஷ்டிகளின் கோல்களின் எண்ணிக்கையையும் சமனுக்கினர் தொடர்ந்து சிவசுப்பிரமணியமும், சிவப்பிரகாசமும் ஒவ்வொரு கோலைப் போட்டு தமது எண்ணிக்கையை 3 ஆக்கினர்கள். ருவின்ஸ் கிளப் கோல் காப்பு வீரர் சிவப்பிரகாசத்தின் ஆட்டம் பாராட்டக் கூடியதாக

(8-ம் பக்கம் பார்க்க)

## ஸ்டார் வெற்றி

உடுவில், ஞாயிறு உடுவில் ஸ்டார் விளையாட்டுக் கோஷ்டிக்கும் அரியாலை இளைஞர் விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையில் நேற்று மாலை நடைபெற்ற சினேகித பூர்வமான உதைபந்தட்டம் ஒன்றில் ஸ்டார் கோஷ்டி 3 கோல்களும், அரியாலை இளைஞர் கோஷ்டி 2 கோல்களையும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டிக்கு திரு. எஸ். தேவராஜா நடுநிலைமை வகித்தார்

## ஸ்போர்ட்ஸ் கிளப் வெற்றி

உடுவில், ஞாயிறு இணுவில் இந்து ஸ்போர்ட்ஸ் கிளப் விளையாட்டுக் கோஷ்டியும் யாழ்ப்பாணம் சில்வர் கிளப் விளையாட்டுக் கோஷ்டியும் நேற்று கலந்து கொண்ட ஒரு உதைபந்தாட்டப் போட்டி முடிவில் இணுவில் ஸ்போர்ட்ஸ் கிளப் 10—1 கோல்களால் வெற்றியீட்டியது. சினேக பூர்வமான இப்போட்டி வைத்தீஸ்வரா மைதானத்தில் நடைபெற்றது.

## விவசாயிகள் வென்றனர்

உடுவில், ஞாயிறு இணுவில் விவசாயிகள் கழகத்துக்கும் உடுவில் வடக்கு இளைஞர் கோஷ்டிக்குமிடையில் நேற்று மாலை உடுவிலில் ஒரு சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இணுவில் விவசாயிகள் கோஷ்டி 3 கோல்களும் உடுவில் கோஷ்டி 2 கோல்களும் பெற்று முடிவில் 3 : 2 கோல்களால் இணுவில் கோஷ்டி வெற்றிபெற்றது.

திரு. எஸ். கணேசரத்தினம் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

## கல்கத்தாவில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொளுத்தி எறிவதில் ஈடுபட்டபோது, பொலிஸார் குண்டாந்தடியடிப் பிரயோகம் செய்து, அவர்களைக் கலைத்தனர். இரு சுற்றுத் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். 47 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றிரவு ஒரு கோஷ்டி, பலாத்காரத்தில் இறங்கமுற்பட்டபோது, பொலிஸார் அவர்களை அடித்துக் கலைத்தனர். 35 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இதற்கிடையில் மேற்கு வங்காள ஐக்கிய முன்னணியிலிருந்து மேலும் 8 அங்கத்தவர்கள், தமது கட்சியில் சேர முன்வந்துள்ளதாகமுற்போக்கு ஜனநாயகக் கட்சியின் செயலாளர் அறிவித்துள்ளார். அவர்களும்சேர்ந்தால் தமது கட்சியின்எண்ணிக்கை, சட்டசபையில் 25 ஆக உயரும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய முன்னணியினர் சில முற்போக்கு ஜனநாயகக்கட்சி அங்கத்தவர்கள் தமது கட்சியில் சேர விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறுகின்றனர்.

சட்டசபை சபாநாயகர் முற்போக்கு ஜனநாயகக் கட்சியைஆதரித்து 17 மெம்பர்கள் கைச்சாத்திட்ட ஒரு மகஜர் தமக்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

மேற்கு வங்காள சட்டசபை, 29ந் திகதியன்றுமீண்டும் கூடுகிறது.

## வடமராட்சி விளையாட்டுச் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள் வடமராட்சி விளையாட்டுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் புலோலி இந்துக் கல்லூரி மண்டபத்தில் திரு. ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் விளையாட்டு மைதானம் ஒன்று விரைவில் அமைக்கப்பட வேண்டுமென்றும் அதற்குரிய நிலத்தைத் தேர்ந்தெடுக்கும் படியும் அதை நன்முறையில் அமைக்கத் தன்னாலியன்றவரை முயற்சி செய்வதாகவும் கூறினார்.

வடமராட்சி விளையாட்டுச் சங்க நிர்வாக உறுப்பினராகப் பின்வருவோர் தெரியப்பட்டுள்ளனர்:-

போஷகர்:- திரு. மு. சிவசிதம்பரம், திரு. க. துரைரத்தினம், திரு. சு. ஜெயகாந்தன்

உபபோஷகர்: திரு வி. கே. ஆறுமுகம், திரு. பி. வீரவாகு, திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. விஷ்ணு சுந்தரம். திரு. என். நடராசா.

தலைவர் திரு. எம் இரத்தினவடிவேல், உபதலைவர்:- திரு. வி. தங்கராசா, திரு. எஸ். இரத்தின வடிவேல், திரு. வீ. சண்முகராசா, திரு. எஸ். முருகப்பா, திரு. எஸ். பஞ்சலிங்கம், காரியதரிசி: திரு. டபிள்யூ. ஆர். அருளையா. உதவிக் காரியதரிசி: திரு. கே. கார்த்திகேசு, திரு. கே. அப்பாத்துரை, திரு. தாமோதரம்பிள்ளை. தனதிகாரி: திரு. சி. சோதிரவி, ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை, கணக்குப் பரிசோதகர்: திரு. செல்லப்பா. நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்கிரமான போருக்கு எதிர்க்கட்சிகள் முஸ்தீபு

கொழும்பு, சனி

ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதைப் பிரச்னையாக வைத்து நாடு முழுவதும் உக்கிரமான எதிர்ப்புப் பிரசாரமொன்றை முடுக்கிவிட எதிர்க்கட்சினர் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிகின்றது.

ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாவனைப் பொருட்களின் விலைவாசிகள் படுமோசமாக உயர்ந்துவிட்டதை எதிர்க்கட்சியினர் தமது எதிர்ப்புப் பிரசாரத்துக்கு முக்கிய கருவியாகப் பயன் படுத்துவார்கள்.

எதிர்க்கட்சிகள் ஒவ்வொன்றும் தனித் தனியே தமது பிரசாரங்களை நடத்தும் என்று தெரிகின்றது.

## 'பொருளாதார நெருக்கடி போக்க வழி'

உடுப்பிட்டி, சனி

"இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைப் போக்கவேண்டுமாகில் பெண்களும் தொழில்துறையில் ஈடுபடவேண்டும், பெண்கள் இயற்கையிலேயே பொறுமைசாலிகளாக இருப்பதால் அவர்கள் எத்தகைய கடினவேலைகளையும் சமாளிக்கமுடியும். படித்தஇளம் பெண்கள் சோம்பேறிகளாக வீட்டுக்குப் பாரமாக இராது குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபடுவதால் குடும்பத்திற்குத் தேவையான வருவாயைப் பெறமுடியும். இலங்கையில் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமாகில் தனியார் தொழில் நிறுவனங்கள் தோன்ற வேண்டும். அரசாங்கம் தேவையான மூலப்பொருட்களைக் 'கோட்டா' முறையில் இறக்குமதிசெய்து ஊக்குவிக்கவேண்டும்.

அத்தியாவசியமான மூலப்பொருட்கள் தங்குதடையின்றிக் கிடைப்பதாயின் நம் நாட்டிலேயே இயந்திரங்களின் உதிரிப்பாகங்களை உற்பத்திசெய்யமுடியும். அடிப்படை சரியாக இருந்தாலே நாட்டில் ஸ்திரமான பொருளாதார வளர்ச்சி ஏற்படும்."

இவ்வாறு வடமராட்சியிலுள்ள தொழில்நிறுவனமொன்றின் அதிபரான திருமதி பரம்ஜோதி பாஸ்கரன் நெல்லியடியில் கருத்தரங்கொன்றில் பேசுகையில் கூறினார்.


இப்பொழுது நடைபெறுகிறது

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி.ப. 2-30, மாலை 6-20, இரவு 9-30 மணிக்கு

பிளாஸா [வெள்ளவத்தை] கெப்பிட்டல் [கொழும்பு]

மைலன் [கொட்டாஞ்சேனை]

விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]

மற்றும் நாலு திரைகளில்

எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்

முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!

கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.

மற்றும்



ஜெயலலிதா, ஜெயந்தி

நம்பியார், அசோகன்,

நாகேஷ், ஸ்ரீராம்,

மனோரமா,

பி. கே. சரஸ்வதி

நடித்த

தேவர் பிலிம்ஸ்

முகராசி

டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்

இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

6-வது வாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] லக்ஷ்மி [கரவெட்டி]

ஜெய்சங்கர் — ஜமுனா — நாகேஷ் — பேபி பத்மினி

நடித்த

ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற

குழந்தையும் தெய்வமும்


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஆஸ்திரேலியா 9700 டன் மாவு வழங்கும்

கொழும்பு, சனி

இலங்கைக்கு ஆஸ்திரேலியா 9700 டன் கோதுமை மாவு கொடுத்துதவ முன்வந்திருக்கின்றது. இந்த மாவு சுமார் ரூபா 45 லட்சம் பெறுமதியானது என்று தெரிகின்றது.

## டின் பால் கூடியவிலைக்கு விற்றார்

### ரூ. 500 அபராதம்

காலி, ஞாயிறு

அஹங்கமவைச் சேர்ந்த வர்த்தகர் ஜி.பி.எச்.லயனல் சில்வா என்பவர், டின்பாலை கூடியவிலைக்கு விற்ற குற்றத்துக்காக ரூ. 500 அபராதம் கட்டும்படி காலி நீதவான் திரு. கொலின் மெண்டிஸால் உத்தரவிடப்பட்டார்.

குணபால என்பவருக்கு கடந்த ஜுலை மாதம் 22-ந் திகதி 'மில்க் மெயிட்' டின் பாலை கட்டுப்பாட்டு விலையான ஒரு ரூபாய்க்கு விற்பதற்குப் பதிலாக ரூ.1-25க்கு விற்றதாகலயனல் டி சில்வா மீது குற்றஞ்சுமத்தப்பட்டது. அவர் தமதுகுற்றத்தை ஒப்புக்கொண்டார்.

## பாடசாலைகள் தரம் உயரும்

முல்லைத்தீவு, ஞாயிறு

வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரத்தின் முயற்சியைத் தொடர்ந்து வவனியா வடக்கிலுள்ள நெடுங்கேணி அரசினர் தமிழ்ப் பாடசாலை கனகராயன் குளம் அரசினர் தமிழ்ப் பாடசாலை ஆகிய இரண்டும் ஜனவரி முதல் மகாவித்தியாலயங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. நெடுங்கேணி மகாவித்தியாலய அதிபராக திரு. மு. முத்தையாவும். கனகராயன் குளம் மகாவித்தியாலய அதிபராக திரு. எஸ்.கே. செல்வரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


நியூ காலிங்கன் [இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி

நடித்த

அன்பே வா

REGAL JAFFNA

Daily at

4-45, 7-00 & 9-45 Only

Gina Lollobrigida

in

M. G. M.

HOTEL PARADISO

in Panavision and color

மனோகரா

யாழ்ப்பாணம்

Daily at

6-30 & 9-45 p.m.

Joy Mokerjee

ShairaBanu - JohnnyWalker

in

DOOR KI AWAZ

[Hindi]

Daily 430p.m.

BEAUTIES by NIGHT

(Adults Only)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'மாதம் ஒரு கப்பல் யாழ்ப்பாணம் வரும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இலங்கையில் தேசியமயமாக்கப்பட்ட துறைமுகங்களிலும் பார்க்க கூட்டுறவு அடிப்படையில் இயங்கும் துறைமுகங்கள் தான் மிகத் திறம்பட இயங்குகின்றன".

இவ்வாறு யாழ்ப்பாணக் கூட்டுறவு துறைமுக சேவையாளர் சமாஜத்தின் ஆதரவில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட கூட்டுறவுப் பகுதி ஆக்க ஆணையாளர் திரு. பி. ஏ. சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

காலித் துறைமுகம் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்னர் தினசரி அங்கு சராசரியாக 600 தொன் சரக்கு இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் தினசரி சராசரியாக 250 தொன் சரக்கே இறக்குமதி செய்யப்படுகின்றது.

கொழும்புத் துறைமுகத்திலும் கூட தொழிலாளர்கள் சரக்கு இறக்குமதி செய்யும்போது அக்கறையோடு செய்வதில்லை. இதனாலேயே விலையுயர்ந்த சரக்குகள் சேதமடைகின்றன. யாழ்ப்பாணத்துத் துறைமுகத் தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இங்கு மாதம் ஒரு கப்பலை அனுப்ப நான் நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் பேசுகையில், இங்கு நாணயமதிப்புக் குறைக்கப்பட்டுள்ளதால் வாழ்க்கைத் தரம் குறைந்த துறைமுகத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுள்ளார்கள் என்றும், கூலி கூட்டித் தரவேண்டும் என தொழிலாளர்கள் கோரினால் தாமும் உதவி புரிய முடியுமென்றும் சொன்னார்.

கருத்தரங்கு இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றது. (ந. நி.)

## இருபோட்டி...

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

இருந்தது. முடிவில் ருவின்ஸ் கிளப் 3—1 கோல்களால் வெற்றியீட்டியது.

பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு டானியல் பிருங் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [ந.நி.]

## குறைந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரைக் கடிதமூலம் கேட்டிருந்ததைத்தொடர்ந்தே அப்பகுதி மக்களுக்கு மிகக் குறைந்தவிலையில்முடிக்குரிய காணியை விற்க அரசாங்கம் முடிவு செய்தது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அரசாங்க அதிபருக்கு எழுதிய கடிதத்தின் சுருக்கம் வருமாறு:

"பாசையூர், கரையூர் வீடமைப்புத்திட்டங்களுக்கு அத்திபாரக் கல் நாட்டி இருவருடமாகியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததால், ஏழை மீனவர்கள் அதிகம்கஷ்டப்படுகிறார்கள்.

"வீடமைப்புத் திட்டங்கள்பற்றி இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததால் மீனவர்கள் விரக்தியடைந்துள்ளனர். நிர்க்கதிக்குள்ளான மீனவர்கள் இன்று தாங்களே வீட்டைக் கட்ட நிலத்தைக்கேட்கின்றனர்."

"வீடமைப்புத்திட்டத்தை விட்டு ஒரு முடிவிற்கு வர ஏற்ற ஒழுங்குகளைச்செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்." (வி.நி.)

## நாட்டின்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களிலிருந்து ஒதுங்கிப் பொறுப்புணர்ச்சியுடன் பாரிய பொறுப்புக்களை மேற்கொள்ளவேண்டும்."

இவ்வாறு உரும்பராய் இளைஞர் விவசாயக் கழகக் காரியாலயத்தை நேற்று முன்தினம் திறந்துவைத்துப் பேசிய சமாதான நீதிபதி திரு. வ. நடேசலிங்கம் கூறினார்.

உரும்பராய் பட்டினசபைத் தலைவர் திரு. க. பத்மராசா, பிரயோக போஷணைத் திட்ட அதிகாரி திரு. சி. வீரசிங்கம், கழகக் காப்பாளர் திரு. அ.சேனாதிராசா உட்படப் பலர் பேசினர்.

பேச்சாளருக்கு நெல்லிக் கனியாலான மாலைகள் சூட்டப்பட்டன.

திரு. எஸ். சற்குணநாதன் நன்றி கூறினார்.

## இன்ஸ்பெக்டர்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

கேட் ஜோர்ஜ் கந்தப்பா தெரிவித்தார்.

இந்தப் பிரச்னையின்போது அவசரகால நிலைமைஏற்படவில்லையென்றும், அப்படியிருந்திருந்தால், மரணவிசாரணையே நடத்தியிருக்கமுடியாதென்றும், வழக்காளி சார்பில் ஆஜரான அட்வக்கேட் என். சிவஞானசுந்தரம் கூறினார்.

எதிர்தரப்பு வழக்கறிஞர் சுப்றிம்கோர்ட்டில் திருப்பி பரிசிலனை செய்வதற்காக மனுக்கொடுப்பதற்குத் தேவையான மரணவிசாரணைப் பிரதிகளையும், தீர்ப்பின் பிரதிகளையும் தருமாறு கோரினார்.

எதிரியைப் பிணையில் விடும்படி எதிரியின் வழக்கறிஞர் விடுத்த கோரிக்கையை நிராகரித்ததற்கான காரணத்தைத் தெரிவிக்கும்போது கொலைக்குற்றத்திற்கு பிணையில்லை யென்றும், கொலைக் குற்றத்திற்கு உடந்தையாக இருப்பதே கொலைக்குற்றமாகுமென்றும் மாஜிஸ்திரேட் தெரிவித்தார்,

விசாரணையை டிசம்பர் மாதம் 8-ம் தேதிக்கு ஒத்திவைத்த மாஜிஸ்திரேட் அன்றையதினம் சாட்சிகளை ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

## இலங்கையே......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகும் என்றும் மேற்கு ஜெர்மன் அதிபர் கூறினார்.

ஜனநாயகத்தை வளர்க்க இலங்கை அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை அவர் பாராட்டினார்.

இலங்கைக்கு மேற்கு ஜெர்மனி மேலும் உதவிஅளிக்க விரும்பினாலும், அதற்கும் தனது சொந்தப் பிரச்னைகள் இருக்கின்றன என டாக்டர் கெயிஸிங்கர் கூறினார்.

தாம் பிரதமருடன் ஆராய்ந்த திட்டங்களில் ஆழ்கடல் மீன்பிடிப்பு அபிவிருத்தி, உல்லாசப் பிரயாணத்தில் இருநாடுகளினதும் இணைப்பான முயற்சி, உருளைக் கிழங்கு உற்பத்தித் திட்டத்தை விஸ்தரிப்பது, தொழில்நுட்பக்கல்வி அளித்தல், தகவல் துறையில் ஒத்துழைப்பு ஆகியவை அடங்கியதாக டாக்டர் கெயிஸிங்கர் தெரிவித்தார்.

முன்னதாக இரு தலைவர்களும் வெளியிட்ட இணைப் பறிக்கையொன்றில், இரு நாடுகளினதும் உறவுகள், உலக நிலைமை இவைபற்றிப் பேசத் தமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு இரு தலைவர்களும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.